# කාර්ය සාධන වාර්තාව - 2020

## කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

## முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்

## DEPARTMENT OF MANAGEMENT AUDIT


| | | |
|---|---|---|
| මහලේකම් කාර්යාලය | செயலகம், | The Secretariat |
| කොළඹ 01 | கொழும்பு 01 | Colombo 01 |

அரச நிதிச் சுற்றறிக்கை இல. 02/2020 இல் உள்ள அறிவுரைகளுக்கு அமைவாக இலங்கைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டது.

**முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம்**

**நிதி, அமைச்சு**

**செயலகம்,**

**கொழும்பு 01**

**2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**
**நிறுவனத்தின் பெயர் : முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்**
**செலவினத் தலைப்பு இல. :324**

**உள்ளடக்கம்** **பக்க இலக்கம்**


| | | |
|---|---|---|
| அத்தியாயம் 01 | - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு | 1-4 |
| அத்தியாயம் 02 | - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு | 5-7 |
| அத்தியாயம் 03 | - வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை | 8-17 |
| அத்தியாயம் 04 | - செயலாற்றுகை சுட்டிகள் | 18-20 |
| அத்தியாயம் 05 | - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை | 21-23 |
| அத்தியாயம் 06 | - மனித வள விபரம் | 24-25 |
| அத்தியாயம் 07 | - இணக்க அறிக்கை | 26-33 |

# அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விபரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

2008.01.25 ஆம் திகதிய 08/0200/306/012 ஆம் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம் திறைசேரியின் திணைக்களமொன்றாக 2008.02.01 ஆம் திகதியன்று தாபிக்கப்பட்டுள்ள அதேவேளையில், திறைசேரியினால் அரசாங்கத்தின் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் விடுவிக்கப்படுகின்ற நிதியங்களை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்காக உள்ளக நிருவாக முறைமையை வலுவூட்டுவது இதன் நோக்கமாகும்.

## 1.2 திணைக்களத்தின் நோக்கு, செயற்பணி, மற்றும் குறிக்கோள்

### 1.2.1. நோக்கு

அதி உயர் செயலாற்றுகையையும் பொறுப்புக் கூறலையும் கொண்ட அரச சேவையொன்றின் பொருட்டு பெறுமதியைச் சேர்க்கின்ற மிகச் சிறந்த முகாமைத்துவ கணக்காய்வுப் பங்குதாரர் நிலையை அடைதல்

### 1.2.2. செயற்பணி

அரச துறையிலுள்ள அமைப்புக்களில் உள்ளக நிருவாகத்தை வலுப்படுத்துவதினூடாக எதிர்பார்க்கப்படும் வெயலாற்றுகையை அடைந்துகொள்வதற்காக திறைசேரியின் திணைக்களம் என்ற வகையில் உதவியையும் வழிகாட்டலையும் வழங்குதல்.

### 1.2.3. குறிக்கோள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்தல்.

2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் மூலம் உள்ளகக் கணக்காய்விற்கு வலுவூட்டல்.

3. உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை விருத்திசெய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துதல்.

4. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முகாமைத்துவ கணக்காய்வு செயற்பாடுகளுக்கு வலுவூட்டல்.

5. விசேட விசாரணைப் பணிகள் மூலம் அரச துறையில் ஏற்படுகின்ற மற்றும் ஏற்படக் கூடிய மோசடிகளை கண்டுபிடித்தல் மற்றும் அவ்வாறான நிலைகளையும் சம்பவங்களையும் தடுப்பதற்கான சிபாரிசுகள் மற்றும் நிவாரணத் திட்டங்களை பரிந்துரை செய்தல்.

## 1.3 முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

1. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வின் தரத்தையும் வினைத்திறனையும் மேம்படுத்துவதற்கான அடிப்படை நிறுவனமாகத் தொழிற்படுதல்.

2. உள்ளகக் கணக்காய்வுக்கான சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தலும் இற்றைப்படுத்துதலும்.

3. அரச துறையிலுள்ள உள்ளகக் கணக்காய்வு அலகுகளை ஒருங்கிணைத்தலும் அது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதலும்.

4. அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்களின் அறிவையும் திறன்களையும் விருத்தி செய்தல்.

5. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல், அது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான பங்களிப்பினை வழங்குதல்.

6. அமைச்சின் கீழுள்ள வெளிநாட்டு உதவி அபிவிருத்திக் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை மேற்பார்வை செய்தலும் வழிகாட்டல்களை வழங்குதலும்.


7. விசேட விசாரணை மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

8. அரச கணக்குகள் பற்றிய செயற்குழுக் கூட்டங்களில் பங்குபற்றுமதுலும் திறைசேரி அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்தலும்

9. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கைகளை எடுத்தல்.

10. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்களினதும் உள்ளகக் கணக்காய்வாளர்களினதும் செயலாற்றுகையை மதிப்பிடுதலும்.

## 4.1 2020.12.31 ஆம் திகதியில் திணைக்களத்தின் அமைப்புரீதியானகட்டமைப்பு




பணிப்பாளர் 01-(மனித வள அபிவிருத்தி)

பணிப்பாளர் 02-(விசாரணை மற்றும் சுற்றறிக்கை)

பணிப்பாளர் 03-(கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டிணைப்பு)

பணிப்பாளர் 04-(உள்ளக கணக்காய்வு அறிக்கை மீளாய்வு)

பணிப்பாளர் 05-(செயலாற்றுகை மீளாய்வு)

பி.பணிப்பாளர் - பிரதிப் பணிப்பாளர்

பணிப்பாளர் 06-(மாகாண சபைகளின் கூட்டிணைப்பு)

பணிப்பாளர் 07-(மாவட்ட செயலகங்களின் கூட்டிணைப்பு)

பணிப்பாளர் 08- (நிருவாகம்)

பணிப்பாளர் 09-(கருத்திட்ட கூட்டிணைப்பு - வெளிநாட்டு நிதி)

பணிப்பாளர் 10- (கருத்திட்ட கூட்டிணைப்பு - உள்நாட்டு நிதி)

உ.பணிப்பாளர் - உதவிப் பணிப்பாளர்

அ.உ- அபிவிருத்தி உத்தியோகத்தர்

பொமு.உ –பொது முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

பி.பொமு.உ –பிரதான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

**திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்**

- உள்ளக கணக்காய்வு மேற்பார்வை பிரிவு
  - (a) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டிணைப்பு
  - (b) விசேட விசாரணை மற்றும் சுற்றறிக்கை
  - (c) மனித வள அபிவிருத்தி
  - (d) உள்ளகக் கணக்காய்வாளர்களின் செயலாற்றுகை மேற்பார்வை
  - (e) உள்ளக கணக்காய்வு அறிக்கை மீளாய்வு
  - (f) மாவட்ட செயலகங்களின் கூட்டமைப்பு கூட்டிணைப்பு
  - (g) மாகாண சபைகளின் கூட்டிணைப்பு
  - (h) அபிவிருத்திக் கருத்திட்டம்

- நிருவாகப் பிரிவு
- கணக்குப் பிரிவு


# அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## 2.1. திணைக்களம் பெற்றுள்ள மதிப்பு மற்றும் விருதுகள்

இலங்கைப் பாராளுமன்றத்தில் அரசாங்க கணக்குக் குழுவின் மேற்பார்வைக்கு உட்படுகின்ற நிறுவனங்களின் நிதி மற்றும் செயலாற்றுகை பற்றி மதிப்பிடுவதற்கான விருது வழங்குதலின் போது தொடர்ச்சியாக 2016, 2017 மற்றும் 2018 ஆம் நிதியாண்டுகளின் பொருட்டு நிதி நிறுவன முகாமைத்துவம் மற்றும் அரச நிறுவனங்களின் செயலாற்றுகை பற்றி உயர் மட்ட செயற்பாட்டு மட்டத்தை அடையப்பெற்ற அரச நிறுவனங்களிடையே முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் இருந்ததன் காரணமாக தங்க விருதைப் பெற்றுக்கொண்டன் 2018 ஆம் நிதியாண்டுக்கான மதிப்பீட்டுக்கு பங்களிப்புச் செய்துள்ள அதேவேளையில், இது வரை அதன் பெறுபேறுகள் வெளியாகவில்லை.

## 2.2. விஷேட வெற்றிகள்

கோவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக வீட்டிலிருந்து கடமைகளை மேற்கொள்ளும் காலகட்டத்தில் அரசாங்க சேவையிலுள்ள உள்ளகக் கணக்காய்வாளர்களுக்கான கைநூலொன்றை வழங்கியமை இந்த திணைக்களம் பெற்ற விசேட வெற்றியாகும். அரசாங்க சேவையில் புதிதாக இணைகின்ற உள்ளக கணக்காய்வாளர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இதன் மூலம் சிறந்த ஆதரவை பெறுகின்றனர்.



## 2.3 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றின் சவால்கள்

2020 ஆம் ஆண்டு மிகவும் சவால்மிக்க ஒரு வருடமாக காணப்பட்ட அதேவேளையில் அது உலகளாவிய தொற்றுநோயாகிய covid -19 அல்லது புதிய கொரோனா வைரஸ் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்த ஒரு வருடமாகும். இந்த தொற்றுநோயின் காரணமாக இலங்கை முழுவதுமாக மற்றும் சிலவேளைகளில் பல்வேறு பிரதேசங்களை முடக்க வேண்டி ஏற்பட்ட அதேவேளையில் அது சனவரி மாதத்திலிருந்து நாட்டுக்கு அச்சுறுத்தலாக இருந்த அதேவேளையில் 2020 மார்ச் மாத நடுப்பகுதியிலிருந்து முழு நாடும் முடக்கப்பட்டது. தொற்றுநோயின் முதலாவது அலை ஆகஸ்ட் மாதம் வரை நிலவிய அதேவேளையில் திணைக்களத்தின் பதவியினர் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறைமையில் ஈடுபட்டிருந்த அதேவேளையில், அது குறிப்பிடத்தக்க அளவில் வெற்றிகரமாக அமைந்தது. அவ்வாறான ஓர் அனுபவம் இலங்கையர்களுக்கு கிடைத்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இருப்பினும் திட்டமிடப்பட்டவாறு அதனை அடைந்து கொள்வதற்கு மேலும் பல விடயங்கள் இருந்தன.

## 2.4 எதிர்கால இலக்கு

2.4.1. உள்ளகக் கணக்காய்வாளர்களினால் பல்வேறு அணுகுமுறை பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடாத்துவதனை தரநிர்ணயப்படுத்துதல், உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் தரப்படுத்தப்பட்ட மாதிரிக்கு அமைவாக சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2.4.2. வருடாந்த நடவடிக்கை திட்டம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற தற்போதைய உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு பதிலாக வருடாந்த அபாயத்தை அடிப்படையாகக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளையில், அது ஒவ்வொரு நிறுவனத்தினாலும் தயாரிக்கப்படுகின்ற அபாய அட்டவணையாகும்.

2.4.3. நகர சபைகளுக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2.4.4. கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வுக்கு ஏற்புடையதாக வெளியிடப்பட்ட 2-2010 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையைத் திருத்துவதற்கான தேவை அடையாளம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சுற்றறிக்கையின் திருத்தம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2.4.5. உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை மிகவும் வினைத்திறனுடன் ஒரே முறையில் நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் பின்வரும் துறைகளுக்கு உரிய புதிய வழிகாட்டல்கள் மற்றும் சரிபார்த்தல் பட்டியல் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

(i) தொகுதி கணக்காய்வு சரிபார்த்தல் பட்டியல்
(ii) அரசாங்கத்தின் சம்பளம் வழங்குதல் சம்பந்தமான தொகுதி கணக்காய்வு சரிபார்த்தல் பட்டியல்
(iii) வாகனங்களை பராமரிக்கும் சரிபார்த்தல் பட்டியல்

### 2.4.6. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதல்

2030 ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக சகல நாடுகளும் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு திட்டமிட்டு உடன்பட்டு உள்ளவாறு இலங்கையும் அதற்காக கையொப்பமிட்டுள்ளது. அதற்கு அமைவாக சென்று முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களமும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் பிரதான உள்ளக கணக்காய்வாளர்களுடன் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் பற்றி தெரியப்படுத்துவதினூடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் வழிநடாத்தும்.

திணைக்களத் தலைவர்
2021/06/

## அத்தியாயம் 03 - 2020 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

**2020 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| பாதீட்டு 2020 | | குறிப்பு | உண்மை நிலை 2020 | 2019 | |
|---|---|---|---|---|---|
| | **வருமானப் பெறுகைகள்** | | | | |
| இல்லை | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| | **வருமானம் பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 50,834,500 | 50,870,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 126,057 | 17,455 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 3,290,228 | 4,336,291 | ஏசீஏ-5/5ஏ/5(பி) |
| - | ஏனைய பெறுகைகள் | | 2,406,318 | 2,132,992 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **56,657,103** | **57,356,738** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **56,657,103** | **57,356,738** | |
| | கழி : செலவினம் | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| 40,985,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 39,215,925 | 37,103,466 | ஏசீஏ-2(ii) |
| 12,645,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 11,687,056 | 12,810,414 | ஏசீஏ-2(ii) |
| 900,000 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 844,663 | 807,836 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | ஏசீஏ-2(ii) |
| **54,530,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **51,747,644** | **50,721,716** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 300,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 50,255 | 295,910 | ஏசீஏ-2(ii) |
| 200,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | - | 10,600 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | ஏசீஏ-2(ii) |
| 700,000 | மனித வள அபிவிருத்தி | 14 | 368,410 | 1,380,168 | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | | ஏசீஏ-2(ii) |
| **1,200,000** | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **418,665** | **1,686,678** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **3,393,308** | **4,524,688** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 126,057 | 17,455 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 3,267,251 | 4,507,233 | ஏசீஏ-5/5ஏ/5(பி) |
| | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | **55,559,617** | **56,933,082** | |
| **55,730,000.00** | **2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)** | | **1,097,486** | **423,656** | |

### 3.3 நிதி நிலைமை பற்றிய கூற்றுக்கள்

ஏசீஏ -பீ

**2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | 2020 | ரூ. 2019 |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகர | ஏசீஏ-6 | 25,210,117 | 25,193,672 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 9,321,799 | 9,344,776 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | |
| **மொத்த சொத்துக்கள்** | | **34,531,916** | **34,538,448** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| தேறிய பெறுமதி | | 9,321,799 | 9,344,776 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 25,210,117 | 25,193,672 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்பக் கணக்குகள் | ஏசீஏ-4 | - | |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **34,531,916** | **34,538,448** |

பக்க இலக்கம் 01 முதல் 26 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 27 முதல் 34 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்காளர் |
| பெயர்:எஸ்.ஆர். ஆட்டிகல | பெயர்:எஸ்.ஏ சந்திரிகா குலத்திலக | பெயர் : ஜீ.ஏ.ஜீ.ரீ. கனேபொல |
| பதவி : செயலாளர், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு | பதவி : பணிப்பாளர் நாயகம் | உதவி பணிப்பாளர்(நிதி) |
| திகதி : 22.02.2021 | திகதி : 22.02.2021 | திகதி : 19.02.2021 |

2

S. R. Attygalle
Secretary to the Treasury and
Secretary to the Ministry of Finance
The Secretariat
Colombo 01

S. A. Chandrika Kulathilaka
Director General
Department of Management Audit
General Treasury
Colombo 01.

G.A.G.T. Ganepola
Assistant Director
Department of Management Audit
General Treasury
Colombo 01.

## 3.4 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்றுக்கள்

ஏசீஏ- சீ

### 2020 டிசம்பர் 31ல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | 2020 ரூபா | உண்மை 2019 ரூபா |
|---|---|---|
| <u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | |
| இலாபம் | - | |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | **2,406,318** | 2,132,992 |
| ஏனைய திணைக்களங்களின்.'. அமைச்சுக்களின் மூலம் திரட்டப்படுகின்ற வருமானம் | - | |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | **50,834,500** | 50,870,000 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **53,240,818** | **53,002,992** |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u> | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | **50,884,391** | 49,880,280 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | **844,663** | 807,836 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | **401,241** | 468,666 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | **965,308** | 200 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **53,095,603** | **51,156,982** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **145,215** | 1,846,010 |
| <u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| முற்பணங்களிலிருந்து அறவிடப்பட்டவை | **3,352,783** | 2,834,647 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **3,352,783** | 2,834,647 |
| <u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u> | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | **418,665** | 1,686,678 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | **3,079,333** | 2,993,979 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **3,497,998** | 4,680,657 |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(145,215)** | (1,846,010) |
| **பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **0** | **0** |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| கிடைக்கப்பெற்ற வைப்புகள் | **126,057** | 17,455 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **126,057** | 17,455 |
| <u>*கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*</u> | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புகளின் கொடுப்பனவு | **126,057** | 17,455 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **126,057** | 17,455 |
| | **0** | **0** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)** | | |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **0** | **0** |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **0** | **0** |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **0** | **0** |

## 3.5 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### அறிக்கையிடலின் அடிப்படை

1) அறிக்கையிடல் காலப்பகுதி

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2020 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) அளவீட்டுக்கான அடிப்படை

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2020 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

**3.6. வருமானத்தை திரட்டுவதன் செயலாற்றுகை**

ரூபா. **000**

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | திரட்டப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக % |
| | | | | | |
| | ஏற்புடையதல்ல | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**3.7. ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை**

ரூபா. 000

| ஏற்பாடுகளின் வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் | | உண்மை செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக % |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| | | | | |
| மீண்டு வரும் | 54,530 | 54, 530 | 51,747 | 95% |
| | | | | |
| | | | | |
| மூலதனம் | 1,200 | 1,200 | 418 | 35% |
| | | | | |
| | | | | |
| | | | | |

**3.7.** நி.ஓ. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சர்களின் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

ரூபா. 000

| தொடர் இலக்கம் | ஏற்பாடுகளை பெற்ற அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | ஏற்பாட்டின் நோக்கம் | ஏற்பாடு | | உண்மை செலவினம் | பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக % |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| 01 | தேர்தல் ஆணைக்குழு | தேர்தல் கொடுப்பனவு | 0.401 | 0.401 | 0.401 | 100% |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**3.8** நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

ரூபா. 000

| வருமான குறியீடு | குறியீட்டின் விபரம் | 2020.12.31ஆம் திகதியில் உள்ளவாறு திறைசேரி ஆய்வு அறிக்கைக்கு அமைவாக நிலுவை | 2020.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை அறிக்கைக்கு அமைவாக நிலுவை | முன்வரும் காலங்களில் கணக்கீடு செய்யப்பட உள்ளவை | முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கையிடல் % |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9152 | இயந்திரசாதனம் | 25,210 | 25,210 | 0 | 100% |
| | | | | | |
| 9153 | காணி | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9154 | அருவமான சொத்துக்கள | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | 0 | 0 | 0 | 0 |
| | | | | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | 0 | 0 | 0 | 0 |

## 3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

** பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் போது, கணக்காய்வாளர் அதிபதியினால் வழங்கப்பட்ட இறுதி கணக்காய்வு அறிக்கை.


# ජාතික විගණන කාර්යාලය
## தேசிய கணக்காய்வு அலுவலகம்
## NATIONAL AUDIT OFFICE


මගේ අංකය / எனது இல. / My No. } TRE/B/DMA/02/20/34 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2021 ජුනි 11 දින

ගණන්දීමේ නිලධාරී
කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව

**කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුවේ 2020 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාව.**

---

**1. මූල්‍ය ප්‍රකාශන**

**1.1 මතය**

කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුවේ 2020 දෙසැම්බර් 31 දිනට මූල්‍ය තත්ත්වය ප්‍රකාශය, එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශවලින් සමන්විත 2020 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ විධිවිධාන සමඟ සංයෝජිතව කියවිය යුතු ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(1) ව්‍යවස්ථාවේ ඇතුළත් විධිවිධාන ප්‍රකාර මාගේ විධානය යටතේ විගණනය කරන ලදී. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(1) වගන්තිය ප්‍රකාරව කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලබන මෙම මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව මාගේ අදහස් දැක්වීම් හා නිරීක්ෂණයන් මෙම වාර්තාවේ සඳහන් වේ. 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 11(2) වගන්තිය ප්‍රකාරව ගණන්දීමේ නිලධාරී වෙත වාර්ෂික විස්තරාත්මක කළමනාකරණ විගණන වාර්තාව 2021 ජූනි 11 දින නිකුත් කරන ලදී. ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154(6) ව්‍යවස්ථාව සමඟ සංයෝජිතව කියවිය යුතු 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 10 වගන්තිය ප්‍රකාරව ඉදිරිපත් කළ යුතු විගණකාධිපති වාර්තාව යථා කාලයේදී පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරනු ලැබේ.

කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුවේ මූල්‍ය ප්‍රකාශනවලින් 2020 දෙසැම්බර් 31 දිනට කළමනාකරණ විගණන දෙපාර්තමේන්තුවේ මූල්‍ය තත්ත්වය සහ එදිනෙන් අවසන් වර්ෂය සඳහා මූල්‍ය කාර්යසාධනය හා මුදල් ප්‍රවාහ ප්‍රකාශය පොදුවේ පිළිගත් ගිණුම්කරණ මූලධර්මවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිබිඹු කරන බව මා දරන්නා වූ මතය වේ .

## 1.2 මූල්‍ය ප්‍රකාශය සම්බන්ධයෙන් ප්‍රධාන ගණන්දීමේ නිලධාරීගේ හා ගණන්දීමේ නිලධාරීගේ වගකීම

පොදුවේ පිළිගත් ගිණුම්කරණ මූලධර්මවලට අනුකූලව හා 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 38 වගන්තියේ සඳහන් විධිවිධානවලට අනුකූලව සත්‍ය හා සාධාරණ තත්ත්වයක් පිළිඹිබු කෙරෙන පරිදි මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරිම හා වංචා සහ වැරදි හේතුවෙන් ඇති විය හැකි ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශනයන්ගෙන් තොරව මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකි වනු පිණිස අවශ්‍යවන අභ්‍යන්තර පාලනය තීරණය කිරීම ගණන්දීමේ නිලධාරීගේ වගකීම වේ.

2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 16(1) වගන්තිය ප්‍රකාරව දෙපාර්තමේන්තුව විසින් වාර්ෂික හා කාලීන මූල්‍ය ප්‍රකාශන පිළියෙල කිරීමට හැකිවන පරිදි ස්වකීය ආදායම්, වියදම්, වත්කම් හා බැරකම් පිළිබඳ නිසි පරිදි පොත්පත් හා වාර්තා පවත්වා ගෙන යා යුතුය.
ජාතික විගණන පනතේ 38(1) (ඇ) උප වගන්තිය ප්‍රකාරව දෙපාර්තමේන්තුවේ මූල්‍ය පාලනය සඳහා සඵලදායි අභ්‍යන්තර පාලන පද්ධතියක් සකස් කර පවත්වා ගෙන යනු ලබන බවට ගණන්දීමේ නිලධාරී සහතික විය යුතු අතර එම පද්ධතියේ සඵලදායිත්වය පිළිබඳව කලින් කල සමාලෝචනයක් සිදු කර ඒ අනුව පද්ධතිය ඵලදායි ලෙස කරගෙන යාමට අවශ්‍ය වෙනස්කම් සිදු කරනු ලැබිය යුතුය.

## 1.3 මූල්‍ය ප්‍රකාශන විගණනය පිළිබඳ විගණකගේ වගකීම

සමස්ථයක් ලෙස මූල්‍ය ප්‍රකාශන, වංචා හා වැරදි හේතුවෙන් ඇතිවන ප්‍රමාණාත්මක සාවද්‍ය ප්‍රකාශයන්ගෙන් තොර බවට සාධාරණ තහවුරුවක් ලබාදීම සහ මාගේ මතය ඇතුළත් විගණකාධිපති වාර්තාව නිකුත් කිරීම මාගේ අරමුණ වේ. සාධාරණ සහතිකවීම උසස් මට්ටමේ සහතිකවීමක් වන නමුත්, ශ්‍රී ලංකා විගණන ප්‍රමිති ප්‍රකාරව විගණනය සිදු කිරීමේදී එය සැම විටම ප්‍රමාණාත්මක අවප්‍රකාශයන්ගෙන් තොර බවට තහවුරු කිරිමක් නොවනු ඇත. වංචා සහ වැරදි තනි හෝ සාමූහික ලෙස බලපෑම නිසා ප්‍රමාණාත්මක අවප්‍රකාශනයන් ඇති විය හැකි අතර, මෙම මූල්‍ය ප්‍රකාශන පදනම් කර ගනිමින් පරිශීලකයන් විසින් ආර්ථික තීරණ ගැනීමේදී ඒ පිළිබඳව සැලැකිලිමත් විය යුතුය.

## 1.4 වෙනත් නෛතික අවශ්‍යතා පිළිබඳ වාර්තාව

2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 6(ඇ) වගන්තිය ප්‍රකාරව පහත සඳහන් කරුණු මා ප්‍රකාශ කරමි.

(අ) මූල්‍ය ප්‍රකාශන ඉකුත් වර්ෂය සමඟ අනුරූප වන බවට,

(ආ) ඉකුත් වර්ෂයට අදාළ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව මා විසින් කර තිබුණු නිර්දේශ ක්‍රියාත්මක කර තිබුණි.

## 2. මෙහෙයුම් සමාලෝචනය

## 2.1 අපේක්ෂිත නිමවුම් මට්ටම් ලබානොගැනීම

වාර්ෂික කාර්යසාධන වාර්තාව අනුව වාර්ෂික ක්‍රියාකාරී සැලසුමේ දක්වා ඇති කාර්යයන්වල අපේක්ෂිත අරමුණු සියයට සියයක් ඉටුකරගැනීමට නොහැකිවී තිබූ බව නිරීක්ෂණය විය. විස්තර පහත දැක්වේ.

(අ) අභ්‍යන්තර විගණන කාර්යමණ්ඩලයේ ධාරිතාවය දියුණු කිරීමට ප්‍රධාන අභ්‍යන්තර විගණක හා අභ්‍යන්තර විගණකයින් සහ අනෙකුත් කාර්යමණ්ඩල සඳහා වන පුහුණු වැඩසටහන් 16 ක් පැවැත්වීමට සැලසුම් කර තිබුණද සමාලෝචිත වර්ෂය තුළදී පැවැත්වීමට හැකිව තිබූ සංඛ්‍යාව 04 ක් හෙවත් සියයට 25 ක් පමණක් විය.

(ආ) අභ්‍යන්තර විගණන ක්‍රියාකාරකම් මගින්, විගණන හා කළමනාකරණ කමිටුවෙහි සුමට ක්‍රියාවලිය සහතික කිරීම සහ රාජ්‍ය අංශ ගිණුම් කටයුතු ශක්තිමත් කිරීමේ අරමුණින් දෙපාර්තමේන්තුවේ සාමාජිකයෙකු නියෝජනය කරන විගණන හා කළමනාකරණ කමිටුව රැස්වීම් පැවැත්වීම, සැලසුම් කල ප්‍රමාණයෙන් සියයට 52 කට සීමාවී තිබුණි.

ඉහත දක්වා ඇති පරිදි අපේක්ෂිත කාර්යසාධන මට්ටම්වලට ළඟාවීමට නොහැකි වූයේ පැවති ගෝලීය කොවිඩ් වසංගත තත්ත්වය නිසා බව අධ්‍යක්ෂ ජනරාල්වරිය දන්වා එවා තිබුණි.

## 3. මානව සම්පත් කළමනාකරණය

2020 දෙසැම්බර් 31 දින වන විට සමස්ථ අනුමත සේවක සංඛ්‍යාවෙන් 05 ක් හෙවත් සියයට 09 ක් පුරප්පාඩුව පැවතුණි.

මේ අයුරින් කාර්ය මණ්ඩල පුරප්පාඩු පැවතීම දෙපාර්තමේන්තුවේ කාර්යසාධනයට අහිතකර අයුරින් බලපාන්නේ නම් එම පුරප්පාඩු පිරවීමට හෝ එසේ නොමැති නම් අනුමත සේවක සංඛ්‍යාව සංශෝධනය කිරීමට කටයුතු කිරීමේ අවශ්‍යතාවය අවධාරණය කෙරේ.

එස්.එම්.ඩී.එස්. සුදීෂ් රෝහිත
නියෝජ්‍ය විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

# அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| தொடர் இல. | குறிப்பீட்டு சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|---|
| | | **100%- 90%** | **75%-89%** | **50%- 74%** |
| 01 | உள்ளக கணக்காய்வு பணியாளர்களின் திறன்களை விருத்தி செய்தல்.<br>1.பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள், உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் ஏனைய பதவியினர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை. | | | **<50%*** |
| 02 | உள்ளக கணக்காய்வு செயன்முறையினை முறைமைப்படுத்துதல்<br>1 திருத்தப்பட்ட சுற்றறிக்கை –(DMA-01/2019- சுற்றறிக்கையின் இணைப்பு 05 இன் திருத்தம்)<br>2 வழிகாட்டல் மற்றும் சரிபார்த்தல் பட்டியலை வெளியிடுதல். | **100%**<br>**90%** | | |
| 03 | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளினூடாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC) சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துதல் மற்றும் அரச துறையின் பொறுப்புக்களை வலுப்படுத்துவதனை சான்றுப்படுத்துதல்.<br>1. கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுவுக்காக (AMC) முகாமைத்துவ கணக்காய்வு பிரதிநிதிகளை நியமிக்கின்ற நிறவனங்களின் எண்ணிக்கை.<br>2. திணைக்களத்தின் உறுப்பினர் ஒருவர் பிரதிநிதித்துவப்படுத்தகின்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் (AMC) கூட்டங்களின் எண்ணிக்கை. | **100%** | | **52%** |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவின் **(COPA)** நடவடிக்கைகளின் ஊடாக அரச துறையின் பொறுப்புக் கூறலின் வலுவுட்டுதல்<br>1. அரசாங்க கணக்ககள் பற்றிய செயற்குழுவுக்கு (COPA) சமர்ப்பிக்கப்பட்டுள்ள திறைசேரி அறிக்கைகளின் எண்ணிக்கை. | **100%** | | |
| 05 | அரச துறைகளின் முறைகேடுகளை தேடிப்பார்ப்பதற்கு பங்களிப்பு செய்தல்.<br>1. முடிவுறுத்தப்பட்டுள்ள மற்றும ஒப்படைக்கப்பட்டுள்ள விசேட விசாரணைகளின் எண்ணிக்கை<br>2. முடிவுறுத்தப்பட்டுள்ள மற்றும் ஒப்படைக்கப்பட்டள்ள கணக்காய்வுகளின் எண்ணிக்கை | **100%** | **82%** | |
| 06 | உள்ளக கணக்காய்வு செயலாற்றுகையின் அறிக்கையை மேற்பார்வை செய்தல்<br>**1.** செயலாற்றுகை மீளாய்வு கூட்டங்களின் எண்ணிக்கை. | **100%** | | |
| 07 | தேசிய கணக்காய்வு சட்டத்திற்கு இணங்கியதாக சட்டத்திற்கு அமைவாக உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை திரட்டுதல்.<br>1. உள்ளக கணக்காய்வு அறிக்கையை மின்னஞ்சல் மூலம் திரட்டி தொடர்புடைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC) பிரதிநிதிகளுக்கு பகிர்ந்தளித்தல். | **100%** | | |
| 08 | அமைச்சின் கிழ் உள்ள வெளிநாட்டு நிதியங்களை வழங்குகின்ற கருத்திட்டங்களின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை வலுவூட்டுதல்.<br>1.மீளாய்வு மற்றும் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்ட சுற்றறிக்கை திருத்தங்களின் எண்ணிக்கை.<br>2.மீளாய்வு செய்து முடிவுறுத்தப்பட்டு வெளியிடப்பட்ட சரிபார்த்தல் பட்டியலின் எண்ணிக்கை.<br>3. கருத்திட்ட உள்ளக கணக்காய்வாளர்களினால் அனுப்பப்பட்ட மீளாய்வு செய்யப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டம் மற்றும் காலாண்டு ரீதியான கணக்காய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை. | **100%** | **85%**<br>**80%** | |

| | | | | |
|---|---|---|---|---|
| 09 | உள்ளூராட்சி நிறுவனங்களிலும் மாகாண சபைகளிலும் உள்ளக கணக்காய்வு அலகுகளை முறைமைபடுத்துதலும் வலுவூட்டுதலும்.<br>1. தரவு தளத்தை (data base) தயாரிப்பதற்காக தகவல்கள் வழங்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை.<br>2. உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு வழிகாட்டல்களின் எண்ணிக்கை.<br>3. பல்வேறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் நடாத்தப்படுகின்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை. | **100 %**<br>**100%** | **75%** | |
| 10 | மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளின் கூட்டிணைப்பு மற்றும் மேற்பார்வை செய்தல்.<br>1. உள்ளக கணக்காய்வு அலகுகள் மீளாய்வு செய்யப்பட்ட மாவட்ட செயலகங்களின் எண்ணிக்கை.<br>2. கிடைக்கப் பெற்றுள்ள காலாண்டு ரீதியான சுருக்க அறிக்கைகளின் எண்ணிக்கை. | | **75%**<br>**75%** | |

*** 2020 ஆம் ஆண்டுக்காக 16 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை (பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்கள், உள்ளகக் கணக்காய்வாளர்கள் மற்றும் ஏனைய பதவியினர்களுக்காக) நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் கோவிட் -19 தொற்றுநோயின் காரணமாக 04 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தக்கூடியதாக இருந்தது. அதனால் ஏற்பாட்டின் சதவீதம் 25மூ ஆகும்.**

.

**** கோவிட் 19 தொற்றுநோயின் காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளின் பதவியினர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு நடாத்த முடியாமற்போனது.**

## அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

### 5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக்காட்டுக

| இலக்கு / குறிக்கோள் | அடைவுகள் | வெற்றிக் குறிகாட்டிகள் | இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%- 100 |
| நோக்கம் 17: நடைமுறைப்படுத்தும் ஊடகங்களை வலுவூட்டுதல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய பங்குதாரர்களை புத்துயிர் பெறச்செய்தல். | 17.15.வறுமையை ஒழித்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான கொள்கைகளை தாபித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றுக்காக இந்த திணைக்களத்தின் கொள்கை வாய்ப்பபுக்கள் (நடவடிக்கை திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தலைமைத்தவத்தை வழங்குதல்) | 17.15.1. திணைக்களத்திற்கு உரிய பெறுபேற்று வரைசட்டகம் மற்றும் திட்டமிடல் கருவிகளின் பயன்பாடு - சுட்டிகள<br>❖ வருடாந்த நடவடிக்கை திட்டம்<br>❖ வருடாந்த கணக்காய்வு திட்டம்<br>❖ வருடாந்த செயலாற்றுகை அறிக்கை | | | 100%<br>100%<br>90% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 17.16. முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உதவுவதற்காக அறிவு, நிபுணத்துவம் தொழிநுட்பம் மற்றும் நதி வழங்களை வலுவூட்டுதல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றுக்கு பல்தரப்பு பங்குதாரர்களின் ஒத்தழைப்புடன் நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய பங்குடைமையினை மேம்படுத்துதல். | 17.16.1. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உதவுகின்ற பல்தரப்பு பங்குதாரர்களின் அபிவிருத்தி உற்ப்பத்தி திரணை மேற்பார்வை செய்யும் வரைசட்டகத்தின் முன்னேற்றத்தை அறிக்கையிடுதல்.<br>**சுட்டிகள்**<br>❖ முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்திய முகாமைத்துவ கணக்காய்வு கூட்டங்களின் எண்ணிக்கை<br>(428 குழுக் கூட்டங்களில் 228 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன). | | 52% | |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வெற்றி மற்றும் சவால்கள்

### 5.2.1 வெற்றிகள்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் விஷேட செலவின அலகுகளில் 428 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் 228 குழுக் கூட்டங்களுக்காக முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் பங்குபற்றியுள்ள அதேவேளையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட பல்வேறு விடயங்களினூடாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

### 5.2.2 சவால்கள்

உலகலாவிய சவாலாக அமைந்த கோவிட் தொற்றுநோய் நிலைமை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும் தாக்கம் செலுத்தியது. மேலும் பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுக்கிடையே நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பற்றிய புரிந்துணர்வு போதுமானதாக இல்லாமை.

# அத்தியாயம் 06 – மனித வள விபரம்

## 06.1 பதவியணி முகமைத்துவம்

| | அனுமதியளிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை | தற்போது காணப்படுகின்ற பதவியணியின் எண்ணிக்கை | வெற்றிடம்/ (மிகை)** |
|---|---|---|---|
| **சிரேட்ட நிலை** | 17 | 17 | - |
| **மூன்றாம் நிலை-** | - | - | - |
| **இரண்டாம் நிலை** | 23 | 23 | - |
| **ஆரம்ப நிலை** | 13 | 08 | 05 |

## 06.2 **நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம்

**ஆரம்ப நிலை :**

❖ **சாரதிகள்:** ஒரு சிரேட்ட உத்தியோகத்தர் மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகப்பூர்வ வாகனத்தை பயன்படுத்தகின்ற அதேவேளையில் ஏனைய சிரேட்ட உத்தியோகத்தர்களின் கடமைக்காக ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகப்பூர்வ வாகனங்கள் பயன்படுத்தப்படாதபடியினால் திணைக்களத்தின் செயலாற்றுகைக்காக சாரதிகளின் வெற்றிடம் தாக்கம் செலுத்தவில்லை.

❖ **அலுவலக பணி உதவியாளர்கள்(கே.கே.எஸ்):** அலுவலக பணி உதவியாளர் ஒரு வெற்றிடம் மாத்திம் காணப்படுகின்ற அதேவேளையில் ஏனைய உத்தியோகத்தர்களினால் கடமை மேற்கொள்ளப்பட்டுள்ள படியினால் அது செயலாற்றுகையில் அவ்வளவு தாக்கமொன்றை ஏற்படுத்தவில்லை.

06.2 மனித வள அபிவிருத்தி (வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்)

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா ’000) | | நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | அடைவுகள் பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| Digital Economy : Big Data & Analysis | 01 | 2020.10.26 – 2020.10.30 | | வெளிநாடு | நிகழ்நிலை ஊடாக | Excel பயன்பாட்டின் மூலம் பாரிய அளவு தகவல்களை பகுப்பாய்வு செய்து தகவல்களை சமர்ப்பிக்கும் முறைமை |

மனித வள அபிவிருத்தி (உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்)

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா ’000) | | நிகழ்ச்சித்திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு) | அடைவுகள் பெற்றுக்கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளிநாடு | | |
| Training on IPPF documented of IIA | 48 | 02 நாள் | - | | உள்நாடு | சர்வதேச நாடுகளின் உள்ளக கணக்காய்வுத் தொகுதி பற்றிய அறிவை விருத்திசெய்து கொள்ளுதல் |

***பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பங்களிப்பு செய்துள்ள விதம்**

கோவிட் 19 தொற்றுநோய் நிலைமை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு பாதகமான தாக்கத்தைச் செலுத்திய அதேவேளையில் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் திறன் விருத்தியை அடைந்துகொள்ள முடியவில்லை.

# அத்தியாயம் 07– இணக்க அறிக்கை

| இலக்கம் | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | | ஏற்புடையதல்ல | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | | ஏற்புடையதல்ல | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.6 | ஏனைய | | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267.∴2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு ∴ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171∴2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (டீேனு) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 6 | **உள்ளகக் கண்காய்வு** | | | |
| 6.1 | நி. பி. 134 (2) DMA 2019 - 1 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணக்கமானது | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7.1 | DMA 2019 -1 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் கடித இலக்கம் DMA/AMC/M/2020/5-4 இன் மூலம் 02 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | | |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01∴2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 05∴2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணக்கமானது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016.˙.30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |
| 10 | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல். | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திரு த்தல். | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலாவதியான வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 14 | **முன்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 15 | **வருமான கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும் | | ஏற்புடையதல்ல | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் | | | |
| 15.3 | நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04.∵.2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 17 | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் ∴ குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 18 | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05.∵.2008 மற்றும் 05.∵.2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் ∴ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் ∴ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02⁄.2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| 20 | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல் | இணக்கமானது | | |

**முற்றும்**